[1973 ஆகஸ்ட் 14

Assistance to victims involved in accidents

* 147 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR :

Thiru P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether any Common Fund has been created for payment to the victims involved in accidents by the State Transport buses; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, வைக்கப் பட்டுள்ள விவர அறிக்கையில் பாதிக்கப்பட்டவருக்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று நெறியாளர் கருதினால் என்றுதான் இருக்கிறது. மரணம் அடைந்தவர்களுடைய குடும்பத்தினருக்காவது இனிமேல் உதவித் தொகை வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டு வகையான நிதி அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலே அமைக்கப் பட்டிருக்கிறது. ஒன்று, விபத்திலே அடிபட்டு, அதனால் உயிரிழந்தவருக்கோ அல்லது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பங் களுக்கும் தருகின்ற உதவி. இன்னொன்று, விபத்தினால் யாரேனும் மூன்றாவது நபர் பாதிக்கப்பட்டால் அவருக்குத் தருகின்ற உதவி. ஆகையினாலே, இதிலே இறந்தவர்கள் என்றோ அல்லது காயம் அடைந்தவர்கள் என்றோ வேறுபாடு இல்லாமல் பாதிக்கப்பட்ட அனைவ ருக்கும் சேர்ந்து நிவாரண நிதி அமைந்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அண்மையிலே நம்முடைய ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸும் ஒரு பிளஷர் காரும் மோதியதன் காரணமாக 4 பேர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள். அவர்கள் சார்பாக உதவி கோரி அரசாங்கத்திற்கு மனுச் செய்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ? அவர்களுக்கு தேர்ட் பார்டி இன்ஷூரன்ஸ் என்ற முறையிலே பணம் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் எனனிடத்தில் இல்லை. ஆனால் தேர்ட் பார்டி இன்ஷூரன்ஸிலே இதுவும் செய்யலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, விமான விபத்தில் இறக்கிறவர்களுடைய குடும்பத்தாருக்கு 1 லட்சம் ரூபாய் தரப்படுகிறது, அதேபோல் ரயில்விபத்தில் இறக்கிறவர்களுடைய குடும்பத்தினருக்கு 50

@390–391-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபாய் காம்பன்சேஷன் தரப்படுகிறது, பேருந்துகளில் செல்லும் பொழுது இறந்துவிட்டால் குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபாயாவது கொடுக்கக்கூடிய அளவிற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதற்கு எல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. ஒருவேளை, விமானத்திலே, ரயிலிலே செல்கின்றவர்கள் அந்தஸ்திலே உள்ளவர்கள் என்ற காரணத்தினால் அவ்வளவு தொகையை அளிக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் விபத்திலே உயிரிழந்தவர்களுக்குக் கூடுமான வரையில் சட்ட விதிகளின்படி எந்த அளவிற்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவிற்குச் செய்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : விபத்துக்களில் இறந்தவர்களுக்கு டிரான்ஸ்போர்ட் இலாகாவே ஒரு நஷ்ட ஈடு தொகையைக் கொடுக்கிறதா அல்லது ஆக்ஸிடெண்ட் கிளெய்ம்ஸ் ட்ரிப்யூனல் மூலமாக வழக்காடி அவர்கள் இவ்வளவு பணம் கொடு என்று உத்திரவிட்டதற்குப் பிறகு கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டு முறைகளும் கையாளப்படுகின்றன.

மாப்படுகை—கோடங்குடி பேருந்து வழித்தடம்

*148 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மாப்படுகையிலிருந்து பஸ் ஸ்டாண்டு வழியாக கோடங்குடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 244-ன்கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்: